3rd December 1954]

MR. SPEAKER :—" Please repeat your question."

SRI N. K. PALANISAMY :—" அம்மாதிரி இருப்பதன் மூலமாக . . ."

MR. SPEAKER :—" இருக்கவில்லை நிறுத்திவிட்டார்கள். The **proposal** has been dropped."

Sale of cultivable waste lands in South Arcot district.

* 16 *Q.*—SRI A. RATNAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the total extent of cultivable Government waste lands sold by Government in South Arcot district in the year 1953; and

(*b*) the total extent out of those lands sold by the Government to the landless and the poor and the extent sold to Harijans?

THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" (*a*) 87·22 acres.

" (*b*) 6 acres of land to the landless and poor persons and 5 acres to the landless poor Harijans of Tirukkoyilur taluk."

SRI A. RATNAM :—" கொடுக்கப்பட்ட நிலங்கள் இனாமாகக் கொடுக்கப்பட்டதா ? அல்லது எவ்வளவு பொருள் வாங்கிக்கொண்டு கொடுக்கப்பட்டது? குறிப்பாக கூடலூரிலுள்ள ஹரிஜனங்களுக்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்னதாக பணம் வாங்கப்பட்டிருக்கிறதனால் நிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? இதுபற்றி சென்ற அசெம்பிளியில் விவாதம் நடந்தது. அப்போது அதுபற்றி விசாரிப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவ்வாறு விசாரணை செய்தார்களா ? அப்படி செய்திருந்தால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? "

THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" Sir, lands are given free but sold when the land is valuable. In this case it has been sold."

SRI A. RATNAM :—" நிலங்கள் விற்கப்பட்டிருக்கிறதே, ஒரு எக்கர் நிலம் எவ்வளவு என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். "

THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" It covers the whole district. I want separate notice, Sir."

SRI P. RAMAMURTHI :—" தரிசாகக் கொடுக்கப்பட்ட நிலங்களை ஏழை விவசாயிகள் வேலைகள் செய்து களையெடுத்து விளைச்சல் பூமியாக மாற்றியபிறகு விற்கப்படுமென்றால் அவைகள் நிலம்படைத்தவர்களுக்குத் தான் போய்ச் சேரும். பாடுபட்ட விவசாயிக்கு அது கிடைக்காது. அப்படியானால் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு என்ன ஏற்பாடு செய்வதாக சர்க்கார் உத்தேசித்திருக்கிறது ? "

THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" Sir, already there is an arrangement to give lands free to the landless poor. The land is sold only in cases where the land is very valuable."

[3rd December 1954

SRI M. JAGANNATHAN :—" Sir, in view of the fact that the purchasing power of Harijans is almost next to nothing, will the Government consider the desirability of distributing cultivable waste lands to Harijans free of cost? "

THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" I have already stated, Sir, that Government are very liberally assigning lands in cases where the land could be assigned free of cost. In cases where the land is valuable, a price is demanded."

SRI M. PALANIYANDI :—" நிலமற்ற ஏழைகளுக்குக் கொஞ்ச நிலம் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. ஆனால் மிகவும் மோசமான நிலங்கள் தான் ஏழை மக்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இந்தமாதிரியான மோசமான நிலங்களை கொடுப்பதால் அதை விளைச்சல் பூமியாக்குவதற்கு சர்க்கார் உதவி செய்வார்களா என்று கேட்கிறேன்."

THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" Sir, there is a practical difficulty also. There is such a great number of applicants for a piece of land that, on this principle, it will be very difficult to assign."

SRI K. PARTHASARATHY :—" Is it not a fact that even now Collectors are authorized to grant lands free of cost to landless poor in deserving cases and in some cases to collect the cost in easy instalments? "

THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" Not only in easy instalments, but in certain cases valuable lands are given free of cost."

SRI S. RAMALINGAM :—" தரிசாக, புறம்போக்காக இருந்த நிலங்களை நிலம் இல்லாத விவசாயிகள் பாடுபட்டு சாகுபடிக்கு உகந்தவாறு செய்த பிறகு அரசாங்கம் அந்த நிலங்களுக்கு அதிகப்படியான விலை கொடுத்தாக வேண்டுமென்று ஒவ்வோரிடத்திலும் கட்டாயப்படுத்துவது சர்க்காருக்குத் தெரியுமா ? இதைத் தடுத்து ஏழை மக்களுக்கு இனாமாக கொடுப்பதற்கு சர்க்கார் முன்வருவார்களா ? "

THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" On the other hand, the Government are aware that in the case of sivayijama lands, first priority is given to the sivayijamadars, i.e., men who occupied and improved the land."

SRI S. RADHAKRISHNAN :—" சாகுபடிக்குத்தகுந்த நிலங்களை ஏழைகளுக்கு விற்கப்படுகிறதா, அல்லது எல்லோருக்குமே கொடுக்கப்பட்டிருக்கிறதா ? எவ்வளவு நிலம் ஏழைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிய விரும்புகிறேன்."

THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" The first priority is given to the landless poor."

SRI M. KALYANASUNDRAM :—" கனம் மந்திரி அவர்கள் கொடுத்த பதிலிலிருந்து ஒரு வருஷத்தில் ஒரு ஜில்லாவில் 87 ஏக்கரா நிலத்தில் 11 ஏக்கர் நிலம் நிலமில்லாத ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறினார். மற்ற நிலங்கள் பூராவும் பணக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இனியாவது சர்க்காருக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களை ஏழை ஹரிஜனங்களுக்கு மட்டும்தான் கொடுக்கப்படும் என்ற உத்திரவை பிறப்பிப்பார்களா ? "

3rd December 1954]

THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" What the hon. Member says is being practically observed."

SRI P. RAMAMURTHI :—" இந்த சர்க்கார் இப்பொழுது கொடுத்த கணக்கிற்கும் கனம் மந்திரி முன்னால் சொன்னதற்கும் நடைமுறையில் ஏதாவது சம்பந்தம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்."

THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" The only connection is the small inter-connection. The hon. Member may draw his own inference."

SRI A. RATNAM :—" கனம் அமைச்சர் கூறியதிலிருந்து தென் ஆற்காடு ஜில்லாவில் 11 எக்கர் நிலம் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது. தென் ஆற்காடு ஜில்லாவில் எத்தனை எக்கர் நிலங்கள் தரிசாகக கிடக்கின்றன ? தியாகிகளுக்கு மான்யங்கள் வழங்கப்பட்ட நிலங்களோடு ஒப்பிடுகையில் ஹரிஜனங்களுக்குக் கொடுத்த நிலம் குறைவாகவே காணப்படுகிறது. இதை 'லிபரல்' என்று கனம் மந்திரியார் குறிப்பிட்டார். எனவே தியாகிகள் விஷயத்தை கண்காணிப்பதுபோல் ஹரிஜனங்களுடைய கணக்கையும் கவனித்து அதற்கு ஏற்றவாறு உத்திரவு உடனடியாக பிறப்பிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்."

THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—" Sir, these figures refer only to one year, that is, 1953. Probably, it was an unfortunate year for the Harijans." (Laughter.)

Attendance of Ministers at the meetings of the Delimitation Commission.

* 17 *Q*.—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state the numbers of Ministers **who attended the Delimitation Commission meetings at Coimbatore during the first week of June 1954?** 11–50 a.m.

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Four Ministers, viz., Minister (Agriculture), Minister (Finance and Education), Minister (Revenue) and Minister (Religious Endowments and Transport) attended the meeting."

SRI N. K. PALANISAMY :—" கோயம்பத்தூரில் நடந்த டீலிமிடேஷன் கூட்டத்திற்கு அந்த கமிஷன் அதிகாரிகளே சர்க்கார் பிரதிநிதிகளை அழைத்தார்களா ? அல்லது இந்த மந்திரிகள் தாங்களாகவே சென்று தங்களுக்குச் சாதகமானவற்றைச் சொல்லிக்கொள்ள சந்தர்ப்பம் உண்டு பண்ணிக்கொண்டார்களா ?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—" The Commission was presided over by an ex-Supreme Court Judge. No hon. Member, much less a Minister, could imagine that he could influence the decision of the Commission as such. The Hon. the Minister for Religious Endowments and Transport was an associate member of the Commission representing this Assembly. The others went there to represent the point of view of the Government."

SRI R. S. ARUMUGHAM :—" டீலிமிடேஷன் கமிஷனிடம் சென்னை சர்க்கார் தொகுதிப் பிரிவினை விஷயமாகத் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்களா ? அப்படியானால் ராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய இரண்டு ஜில்லாக்களுக்கும் சேர்ந்து ஒரு தாழ்த்தப்பட்ட பார்லமெண்ட்